

சென்னை – ஆழ்வார்பேட்டையில் உள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில், நேற்று (21.10.2026), கழக முன்னோடி நினைவில் வாழும் செங்குன்றம் டி.நாகலிங்கம் அவர்களின் பெயர்த்தியும், செங்குன்றம் பேரூர்க் கழகப் பொருளாளர் லயன் என்.சந்திரசேகர் – திருமதி லயன் சி.ராஜேஸ்வரி ஆகியோரின் புதல்வியுமான செல்வி சி.மணிமேகலை, கே.ராஜேஸ்குமார் ஆகியோரது மணவிழாவை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆகியோர் உள்ளனர்.

பா.ஜ.க.வின் கார்பன் காப்பியாக செயல்படாமல் உடனே விடுதலை செய்வீர்!

நா.த.க. வேட்பாளர் கைது; கடைந்தெடுத்த பாசிசம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.22-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை கைது செய்திருப்பது கடைந்தெடுத்த பாசிசம் என்றும், 'ரீல்ஸ்' முதலமைச்சர், பா.ஜ.க.வின் கார்பன் காபியாக செயல்படாமல், அவரை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது கண்டனப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சகோதரி



கார்த்திகாவை இந்த Circus அரசாங்கம் கைது செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேர்தல் நேரத்தில் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில், அரசியல் பழிவாங்கலோடும் த.வெ.க.வினரின் போதைப்பொருள் கடத்தல் செய்திகளை திசைத்திருப்பவும் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியலில் விமர்சனங்களும் ஜனநாயக ரீதியான போராட்டங்களும் தவிர்க்க முடியாதவை. அதற்காக எதிர்வரிசையில் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை கைது செய்வது என்பது கடைந்தெடுத்த பாசிசம்.

இந்த ரீல்ஸ் முதலமைச்சர், பா.ஜ.கவின் Carbon Copyஆக செயல்படாமல், சகோதரி கார்த்திகாவை விடுவிக்கத் தேவையான நடவடிக்கையை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு

மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, அக்.22-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

24.10.2026 சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழுக் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி., அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளைக் கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கருத்துக்கள் வழங்கி உரையாற்றுகின்றனர்.

செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

சிவகங்கையில் வீரத்தாய் குயிலியின் 246 வது ஆண்டு நினைவு தினம்!

முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மதிவேந்தன் மரியாதை!

சிவகங்கை. அக்.22.

சிவகங்கை யை புரிந்த ராணி வேலுநாச்சியார் படையில் பணியாற்றிய வர் குயிலி .இவர் நாட்டின் சுதந்திர போராட்டத்திற் காக ஆங்கிலேயர் படைகள் சிவகங்கை மீது தாக்குதல் நடத்த வந்த பொழுது அதை எதிர்த்து அங்குள்ள ஆயுதக்கிடங்கில் தன் உடலில் நெருப்பினை வைத்துக் கொண்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

இதனால் வீரத்தாய் குயிலி என்று அழைக்கப் பட்டார். இத்தகைய குயிலியின் வீரச் செயலை கண்டு ஆங்கிலேயர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஒரு பெண் இவ்வாறு நாட்டின் சுதந்திர போராட்டத் திற்காக தன் உயிரை மாய்த்துக் கொண்டதை பார்த்து மிகவும் அதிர்ச்சி அடைந்தார்கள். அத்தகைய வீரத்தாய் குயிலிக்கு சிவகங்கையில் நினைவிடம் அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வந்தது.

அந்த கோரிக்கையினை ஏற்று கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கடந்த 2025 ஆம் ஆண்டு ரூபாய் 50 லட்சம் அளவில் சிவகங்கை காளையார் கோவில் சாலையில் உள்ள மாமன்னர் மருதுபாண்டியர்கள், ராணி வேலுநாச்சியார் நினைவிடத்தின் வளாகத்தில் முழு உருவ வெண்கலச் சிலையினை அமைத்து அதை திறந்து வைத்தார்.

அத்தகைய வீரத்தாய் குயிலியின் நினைவு தினம் அக்டோபர் 20ம்தேதிஆகும். நேற்று முன்தினம் வீரத்தாய் குயிலியின் ஆண்டு 246 வது நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. குயிலி யின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திரு உருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர்கள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர்கேஆர். பெரிய கருப்பன் தலைமையில் மருத்துவர் மதிவேந்தன், திருமதி தமிழரசி ரவிக்குமார், ஆகியோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மானாமதுரை நகர்கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர் கள் எம். ஜெயராமன் திருமலை முத்துராமலிங்கம், துரை.ராஜாமணி. அ.முத்துச்சாமி, பெ. மந்த காளை, மா.அண்ணாதுரை, வே. தமிழ்மாறன், எம்.ஏ கடம் பசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட செய்தி தொடர் பாளர் அ.அயூப்கான், மாவட்ட மாணவரணிஅமைப்பாளர் கதி. ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் மார்க்ரெட் கமலா, திலகவதி கண்ணன் முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் துஷாந்த் பிரதீப்குமார் மற்றும் ஒன்றிய, நகர, பேருர்கழக நிர்வாகிகள் மீனவரணி அண்ணாமலை, ஜெயகாந்தன், வீனஸ் ராமநாதன், தொ.மு.ச.முருகேசன், விவசாய அணி காளிமுத்து, அச்சங்குளம் முருகன், மாவட்ட இளைஞரணி ,துணை அமைப்பாளர்கள் மதிவாணன், கார்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் ஆகியோர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசியவரின் பதில் என்ன?

செஞ்சி சிறுமியை மீட்க த.வெ.க. அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, அக்.22-

பெண்களுக்கு அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச்சரின் பதில் என்ன என்றும், செஞ்சி சிறுமியை மீட்க உடனே நடவடிக்கை எடுத்து, அது பற்றி அரசு உடனடியாக விளக்க வேண்டும் என்றும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பெருந்துறையில் காணாமல் போன செவிலியர், ஐந்து நாட்களுக்குப்பிறகுசடலமாகமீட்கப்பட்டுள்ளார். அவரைக் காணவில்லை என்று புகாரளிக்கச் சென்றபோது, அந்தப் பெண்ணையே இழிவுபடுத்திப் பேசி, நடவடிக்கை எடுக்காமல் காவல்துறை அலட்சியமாகச் செயல்பட்டதாக உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.



மறுபுறம், செஞ்சியில் ஏழு வயதுச் சிறுமி காணாமல் போய் ஒன்பது நாட்களாகியும், குழந்தை குறித்த எந்தத் தகவலும் கிடைக்காததால் பெற்றோர் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஒன்பது நாட்களாகியும் குழந்தையைக்கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால், காவல்துறையை வைத்துக்கொண்டு முதலமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

பெண்களுக்கு அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச்சர் @TVKVijayHQ அவர்கள், இந்த குற்றச்சம்பவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

பெருந்துறை வழக்கில் குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகளை விசாரணையிலிருந்து நீக்கி, நேர்மையான அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும். செஞ்சிச் சிறுமியை மீட்பதற்கான தேடுதலைத் தீவிரப்படுத்தி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அரசு உடனடியாக விளக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

கோவை பெரியார் நூலகத்துக்கு 2 நாள் அரசு விடுமுறை!

அறிவுலகத்திற்கு லீவு விட்ட அறிவார்ந்த த.வெ.க. ஆட்சி!

தி.மு.க. விமர்சனம்!

கோவை, அக். 22-

கோவை பெரியார் நூலகத்துக்கு 2 நாள் அரசு விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில், அறிவுலகத்திற்கு லீவு விட்ட அறிவார்ந்த ஆட்சி, த.வெ.க. ஆட்சி என தி.மு.க. விமர்சித்து உள்ளது. கோவை காந்திபுரம் பஸ் ஸ்டாண்ட் அருகே 300 கோடி ரூபாய் செலவில் பெரியார் அறிவுலகம் என்ற பெயரில் பிரமாண்ட நூலகம் கடந்த தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டது. இந்த நூலகத்தை சமீபத்தில் முதல்வர் விஜய் திறந்து வைத்தார். இந்த நூலகத்திற்கு ஆயுத பூஜை மற்றும் விஜய தசமியை முன்னிட்டு 19 மற்றும் 20ம் தேதி விடுமுறை வழங்கி மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா சோசியல் மீடியாவில் ஆயுத பூஜைக்கு பெரியார் அறிவுலகத்திற்கு லீவு விட்டு அறிவார்ந்த ஆட்சி இன்றைய த.வெ.க. ஆட்சி. பேஷ் பேஷ் ஆனால், அறிவாலயத்திற்கு கலைஞர் திறந்து வைத்த அண்ணா நூற்றாண்டு நூலகம் இன்றும் திறந்திருக்கிறது.

அது சரி அறிவுக்கு விடுமுறைவிட்டிருக்கும் ஆட்சியில் இது அதிசயம் அல்லவே என பதிவிட்டிருக்கிறார். பெரியார் அறிவுலகம் கல்வித்துறை மூலமாக பராமரிக்கப்படுகிறது.

கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கிய நிலையில், அந்த துறையின் கீழ் இயங்கி வரும் பெரியார் அறிவுலகத்திற்கும் விடுமுறைவிடப்பட்டது என கோவை மாவட்ட கல்வித்துறையினர் தெரிவித்தனர்.